**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 79/2022**

| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|---|---|
| NAME | கோமதி | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 17.11.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. எனது தங்கை சித்ரா என்னுடைய பாதுகாப்பில் இல்லை என்றாலும் என்னுடைய பாட்டியின் அரவணைப்பு மற்றும் பாதுகாப்பில் உள்ளார் என்றால் சரிதான். தாவாவில் எனது அப்பா சம்பத் காணாமல்போன அன்று மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் என்ற விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா மனநிலைசரியில்லாமல் யாருடைய பாதுகாப்பில் இருந்தார் என்றால் அவரது அம்மா முனியம்மா பாதுகாப்பில் இருந்தார்.

2. முனியம்மா தற்போது உயிருடன் இல்லை. முனியம்மாவின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா மனநிலை மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துவந்தாரா என்றால் சென்னையில் எடுத்து வந்தார். எனது அப்பா காணாமல்போனபோது ஊரில் தேடி பார்த்ததாக சொல்லும் நிலையில் மனநிலை மருத்துவமனைகளில் தேடிப்பார்த்தோமா என்றால் இல்லை நாங்கள் சின்ன பசங்கள். எனது பாட்டி முனியம்மா மருத்துவமனையில் தேடிப்பார்த்தாரா என்றால் அதுபற்றி தெரியாது.

3. எனது தந்தை மனநிலை பாதிக்கப்பட்டு வேறு எங்காவது உயிருடன் இருக்க வாய்ப்புள்ளது என்றாலும் அந்த விவரத்தை மறைத்து தாவா தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. உண்மை விவரத்தை நீதிமன்றத்தில் சொல்லாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.